## விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்
## ஆறுபடை வீடு தொழில்நுட்ப கல்லூரி
## &
## E1, மாமல்லபுரம் காவல் நிலையம்

### இருசக்கர வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு அறிவிப்பு

- இருசக்கர வாகன ஓட்டி தரமான தலைகவசம் அணிந்து கண்டிப்பாக தாடை பெல்ட்டை மாட்டி செல்லவும், தலைகவசம் அணிந்து தாடை பெல்ட் மாட்டாமல் சென்றால் விபத்தினால் தலைகவசம் கழன்று கீழே விழுந்து விடும். தலையில் அடிப்பட்டால் மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு 90% பிழைப்பது அரிது.
- தலைகவசம் அணியாமல் இருசக்கர வாகனத்தை ஒட்டினால் ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யபடும்.
- பெண்கள் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்செல்லும்போது கட்டாயம் தலைகவசத்தை அணிந்து செல்லவும்.
- இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தலைகவசம் அணியாமல் செல்வது மோட்டார் வாகனச்சட்டம் 1988 பிரிவு 129-ன்படி குற்றமாகும்.
- இருசக்கர வாகன ஓட்டுநர் மற்றும் பயணிப்பவர் தலைகவசம் கட்டாயமாக அணிந்திருத்தல் வேண்டும். தவறும்பட்சத்தில், மோட்டார் வாகனச்சட்டம் 1988 பிரிவு 206-இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தின் அனைத்து ஆவணங்கள் மற்றும் ஓட்டுநரின் உரிமம் ஆகியவை பறிமுதல் செய்யப்படும். இந்திய தர நிர்ணய சான்று பெற்ற புதிய தலைகவசம் மற்றும் அதனை வாங்கியதற்கான இரசீது ஆகியவற்றை காண்பித்தால் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் விடுவிக்கபடும் என இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
- ஆகவே இருசக்கர வாகன ஓட்டுநர் அனைவரும் தங்களின் சுயபாதுகாப்பு கருதியும், உயர்நீதிமன்ற உத்தரவின்படி தலைகவசம் அணிந்து சென்று, சாலை விபத்தில் உயிரிழப்பு ஏற்படுவதை தவிர்த்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- ஓட்டுநர் உரிமம், இன்சூரன்ஸ் மற்றும் வாகன உரிமை சான்று இல்லாமல் வாகனம் ஓட்டாதீர்கள்.
- குடிபோதையில் வாகனம் ஓட்டாதீர்கள்.
- வாகனம் ஓட்டும்போது செல்போன் பேசிக்கொண்டே செல்லாதீர்கள், ஓரமாக வாகனத்தை நிறுத்தி பேசிவிட்டு செல்லவும்.
- அதிவேகம் ஆபத்தை தரும்.

**சாலை விதிகளை மதிப்போம், விபத்தினை தவிர்ப்போம்.**

வீட்டில் அம்மா, அப்பா, சகோதரிகள், சகோதரர்கள், மனைவி, தங்கள் செல்லக்குழந்தைகள் அனைவரும் காத்திருப்பார்கள் என்பதை நினைவில் கொண்டு வாகனத்தை ஓட்டிச்செல்லவும்.

இங்கனம்

ஆறுபடை வீடு தொழில்நுட்ப கல்லூரி & E1, காவல் நிலையம், மாமல்லபுரம்.